

சேலம் கிழக்கு மாவட்டம் வாழப்பாடியில் உள்ள அலுவலகத்தில் தளபதி மு. க. ஸ்டாலின் அறிவாலயம், கலைஞர் அரங்கில் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் கழக உறுப்பினர் அட்டையை நிர்வாகிகளிடம் வழங்கினார். அப்போது மாவட்ட அவைத்தலைவர் முரா. கருணாநிதி, மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ. ஏ. ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் உமா சங்கர், வெண்ணிலா சேகர், விஜயகுமார், மாணிக்கம், ரத்தினவேல், ராஜேந்திரன், மாதேஸ்வரன், சக்கரவர்த்தி, மூர்த்தி, மருதமுத்து, சிவராமன், டாக்டர் செழியன், பழனிசாமி, சித்தார்த்தன், அழகுவேல், பாலமுருகன், நகர செயலாளர்கள் வேல்முருகன், பாலசுப்பிரமணியன் , தொகுதி பார்வையாளர்கள், பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழக முப்பெரும் விழா – பவள விழா ஆண்டு நிறைவுவை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட, அன்னவாசல் தெற்கு ஒன்றியம், புல்வயல் ஊராட்சி புல்வயல், நிலையப்பட்டி ஆகிய கிராமங்களில் கழக கொடியேற்று விழா ஒன்றிய செயலாளர் கே.எஸ்.சந்திரன் தலைமையில் மாவட்டச் கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் முன்னிலையில் சட்டத்துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி கழக இருவண்ண கொடியேற்றி சிறப்பித்தார். நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், மாவட்ட கவுன்சிலர் அண்ணாப்பிட்டி க.பழனிச்சாமி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ஏ.சுந்தர்ராஜ், ஒன்றிய அவைத்தலைவர் ஜி.பழனிச்சாமி, ஒன்றிய கவுன்சிலர் எம்.கோவிந்தராஜ் உள்ளிட்ட ஒன்றிய கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

### பெரம்பலூர் மாவட்டம் –

# எறையூரில் உள்ள பெரம்பலூர் சர்க்கரை ஆலையை பார்வையிட்டு ஆய்வு!

### அமைச்சர்கள் இரா.இராஜேந்திரன் – சா.சி.சிவசங்கர் மேற்கொண்டனர்!

பெரம்பலூர், அக். 30 - பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், எறையூர் கிராமத்தில் உள்ள பெரம்பலூர் சர்க்கரை ஆலையில், சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் இருவரும் சர்க்கரை ஆலைகள் இயக்குநர் த.அன்பழகன், மாவட்ட ஆட்சித் தலைவர் கிரேஸ் பச்சாவ் ஆகியோர் தலைமையில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வின்போது பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் கே.என். அருண் நேரு, பெரம்பலூர் சட்ட மன்ற உறுப்பினர் ம.பிரபா கரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சர்க்கரை ஆலையில் உள்ள இயந்திரங்கள் குறித்தும், அவற்றின் தற்போதைய நிலை குறித்தும் அமைச்சர்கள் ஆலையின் ஒவ்வொரு பகுதியாக பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். அதனைத் தொடர்ந்து, சர்க்கரை ஆலை தலைமை நிர்வாகி அலுவலக கூட்ட அரங்கில், விவசாயிகள், தொழிற்சங்கங்களின் பிரதி நிதிகளுடன் கலந்துரை யாடிய அமைச்சர்கள், சர்க்கரை ஆலை அலுவ லர்களுடன் ஆலை நிர்வா கத்தில் மேற்கொள் ளப்பட்டு வரும் பணிகள், விவசாயிகளுக்கு வழங் கப்பட்டுள்ள நிலுவைத் தொகை, வழங் கப்பட வேண்டிய தொகை உள் ளிட்டு விரிவாக ஆலோ சனை மேற்கொண்டு அனைவரி டத்திலும் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வின்போது, டிராக்டர் சங்கத்தினர், சர்க்கரை ஆலைக்குள் டிராக்டரில் கரும்பு லோடு ஏற்றி வருவதற்கு ஏதுவாக சாலையினை மேம்பாடு செய்து தரவேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். இதைக்கேட்ட சுற்றுலா த்துறை அமைச்சர் அடுத்த அரவைப்பரு வத்திற்குள் சாலையினை மேம்பாடு செய்ய நட வடிக்கை எடுக்க ஆலை தலைமை நிர்வாகிக்கு உத்தர விட்டார்.

இந்நிகழ்வின் போது சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது:

கரும்பு விவசாயிகளின் நலன் மற்றும் சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு 2 பொதுத் துறை, 22 தனியார் என மொத்தம் 40 சர்க்கரை ஆலைகள் உள்ளன. 2023-24 அரவைப் பருவத்தில் 12 கூட்டுறவு, 2 பொதுத் துறை, 16 தனியார் என மொத்தம் 30 சர்க்கரை ஆலைகள் இயங்கியது.

2019-2020 நடவுப் பருவத்தில் 0.95 லட்சம் எக்டராக இருந்த கரும்பு பதிவு பரப்பு 2022-2023 நடவுப் பருவத்தில் 1.37 லட்சம் எக்டராக அதிகரித்தது. பின்னர் 2023-2024 நடவுப்பருவத்தில் 0.99 லட்சம் எக்டராக குறைந்தது. அதே போல கரும்பு அரவை, 2022-2023 ஆம் ஆண்டில் 160.54 லட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. நடப்பாண்டில் 95 லட்சம் மெட்ரிக் டன் அரவை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கரும்பு சாகுபடி போதிய மழை இல்லாமை, பண்ணை வேலையாட்கள் பற்றாக் குறை, பொக்கா போயிங் நோய் தாக்குதல் மற்றும் அதிக கரும்பு அறுவடைக் கூலி ஆகிய காரணங்களால் குறைந்தது. கரும்பு விலை 2015-16 அரவை பருவத்தில் இருந்து 2019-20 அரவை பருவம் வரை உயர்த்தப் படாமல் டன் ஒன்றுக்கு ரூ.2750/ என்றிருந்தது. இதனைக ருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு 2020-21 அரவை பருவத்திற்கு நியாயமான மற்றும் ஆதாய விலைக்கு மேல் சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.192.50/ அறிவிக்கப் பட்டது. 2021-22 மற்றும் 2022-23 அரவை பரு வங்களில் சிறப்பு ஊக்கத் தொகை ரூ.195.50 ஆக உயர்த்தப்பட்டுள்ளது இதன் விளைவாக 2022-23 அரவை பருவத்தில் கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ.3016 ஆக உயர்த் தப்பட்டுள்ளது.

2023-24 அரவை பருவத்தில், நியாயமான மற்றும் ஆதாய விலைக்கு மேல் தமிழ்நாடு அரசால் டன் ஒன்றுக்கு ரூ.215/ சிறப்பு ஊக்கத்தொகையாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ.3135/ ஆக உயர்த் தப் பட்டுள்ளது. இதற்காக தமிழ்நாடு அரசால் ரூ.250 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்குவதற்கும். சர்க்கரை ஆலை பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கும். ஆலையின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்காகவும் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.694.37 கோடி வழிவகைக் கடனாக தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு, பொதுத்துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலை விவசாயிகள் பயன் பெரும் வகையில் சிறப்பு ஊக்கத் தொகை வழங்கு வதற்காக கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.775.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து விவ சாயிகளின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்ப ட்டுள்ளது.

கரும்பு சாகுபடிப் பரப்பு மற்றும் சர்க்கரைக் கட்டு மானத்தை அதிகரிக்கும் நோக்குடன் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் (NADP) உயர் மகசூல், அதிக சர்க்கரைக் கட்டு மானம் கொண்ட கரும்பு இரகங்களின் வல்லுநர் விதைக் கரும்பு, திசு வளர்ப்பு நாற்றுக்கள், பருசீவல் நாற்றுக்கள். ஒருபரு விதைக் கரும்பு போன்ற இனங்களுக்கு மானியம் வழங்கப் படுகிறது. கடந்த இரண்டாண்டுகளில் 10,480 விவசாயிகளுக்கு ரூ. 8.40 கோடி மானியம் வழங்கப் பட்டுள்ளது. மேலும், இத்திட்டம் 2024-25 ஆம் ஆண்டிலும் ரூ.7.91 கோடி மதிப்பீட்டில் செயல்படுத் தப்படும்.

2021-2024 நிதி யாண்டுகளில் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் கரும்பு சாகுபடி பரப்பை அதிகரிக்கும் நோக்குடன் அதிக மகசூல், அதிக சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு இரகங்க ளின் பருசீவல் நாற்றுக்கள், ஒருபரு விதைக் கரும்பு ஆகியவை 2,379 விவசாயி களுக்கு இது வரை 1.68 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

கரும்பு சாகுபடியில் சொட்டுநீர்ப் பாசனம் அமைப்பதற்கு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. கரும்பு விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம் அமைப்பதற்குத் தேவைப்படும் உபகர ணங்கள் கொள்முதல் செய்வதற்கு மாநில நிதி யிலிருந்து ஒரு எக்டருக்கு ரூ.32,715 லிருந்து ரூ.43,534 வரை சிறப்பு நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. குறைந்த நீரைப் பயன்படுத்தி கரும்பு சாகுபடி மேற்கொள்ளும் வகையில் 2023-2024 ஆம் ஆண்டு 1,432 எக்டர் பரப்பளவில் புதிதாக நுண்ணீர்ப் பாசனம் அமை க்கப்பட்டு 1,335 விவசாயிகள் பயனடைந் துள்ளனர்.

13 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் தானியங்கி எடைமேடை அமைக்கப் பட்டுள்ளது. இதனால் கரும்பு விவசாயிகள் வழங்கும் கரும்பிற்கு துல்லியமான முறையில் எடையிடப்பட்டு உடனுக்குடன் எடை விவரங்கள் குறுஞ்செய்தி யாக அனுப்பி வைக்கப் படுகின்றன. 13 கூட்டுறவு மற்றும் 2 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் நவீன ஆய்வ கங்கள் அமைக் கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி இன்று பெரம்பலூர் சர்க்கரை ஆலை ஆய்வு செய்யப்பட்டு, விவசாயிகள், தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளிடம் கலந்துரையாடி கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளது. அனைத்து கோரிக்கைகளின் மீதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இதில் சர்க்கரைத்துறை கூடுதல் இயக்குநர் பாலமுருகன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, பெரம்பலூர் சர்க்கரை ஆலை தலைமை நிர்வாகி வருவாய் அலுவலர் க.ரமேஷ் வேப்பந்தட்டை அட்மா தலைவர் வீ.ஜெகதீசன் வேப்பந்தட்டை ஒன்றிய குழு பெருந்தலைவர் க.ராமலிங்கம் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் தழுதாழை பாஸ்கர், மகாதேவி ஜெயபால், ஆலை அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் விவசாய சங்க பிரதிநிதிகள் தொழிற்சங்க பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

### திருவாரூர் மாவட்டம் – ஓடாச்சேரி கிராமத்தில்

# மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர் குடும்பத்தினருக்கு நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக்.30 -**

**திருவாரூர் மாவட்டம், ஓடாச்சேரி கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் மற்றும் நிதியுதவி - அறிவித்துள்ளார்.**

இதுதொடர்பான, முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு :-

திருவாரூர் மாவட்டம் மற்றும் வட்டம், கல்லிக்குடி வருவாய் கிராமம், வடக்குவெளியைச் சேர்ந்த அஜித்குமார் (வயது 27) என்பவர் 27.10.2024 அன்று ஓடாச்சேரி கிராமத்தி லுள்ள மின்மாற்றியில் பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி மயக்கமடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க செயற்குழுக் கூட்டம்! முரசொலி செல்வம் மறைவிற்கு இரங்கல்!

# புதிய தேர்தல் பார்வையாளர்கள் அறிமுகம்!

### மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ கூட்ட தீர்மானங்களை விளக்கி சிறப்புரை!

தஞ்சாவூர், அக். 30 - தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம், தஞ்சாவூர் மாவட்டக் கழக அலுவலகம், கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அவைத்தலைவர் சி.இறைவன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்எஸ்.பழநிமாணிக்கம், ச.முரசொலி எம்.பி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, மாவட்டக் கழக நிர்வாகிகள் எஸ்.ஜி. அண்ணா, அ.புண்ணியமூர்த்தி, மணிமாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் பார்வையாளர்கள் தஞ்சாவூர் தொகுதி ஏ.கே.எஸ். விஜயன், ஒரத்தநாடு தொகுதி பரணி இ.எ.கார்த்திகேயன், திருவையாறு தொகுதி பி.கேசவன் ஆகியோரை அறிமுகபடுத்தி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் து.செல்வம், எம்.இராமசந்திரன், கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமி, தஞ்சாவூர் மாநகரச் செயலாளர் - மேயர் சண்.இராமநாதன், மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் மரு.அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்துக்கொண்டனர்.

நம் நெஞ்சம் நிறைந்த தலைவர் கலைஞரும், அவர்களின் மருமகனும், கழகத்தின் கேடயமாம் முரசொலி நாளிதழின் ஆசிரியராக கடந்த 35 ஆண்டுகளாக பணியாற்றி கழகத்தின் கொள்கை தூணாக திகழ்ந்த திரு.முரசொலி செல்வம் அவர்களின் மறைவிற்கு இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கின்றது.

கழக தொண்டர்களின் உணர்வுகளை ஏற்றுக் கொண்டு திராவிட இயக்கத்தின் 5 ம் தலைமுறை தலைவராகவிளங்கக்கூடிய இளம்தலைவர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை துணை முதல்வராக, முதல்வர் அவர்கள் நியமனம் செய்ததை தஞ்சை மத்திய மாவட்ட கழகம் வரவேற்று நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

தலைமை கழகத்தால் தொகுதி மேற்பார்வைளாயர்களாக தஞ்சாவூர் தொகுதிக்கு ஏ.கே.எஸ். விஜயன், ஒரத்தநாடு தொகுதிக்கு பரணி. இ.எ.கார்த்திகேயன் மற்றும் திருவையாறு தொகுதிக்கு பி.கேசவன் அவர்களையும் தஞ்சை மத்திய மாவட்ட கழகத்தின் சார்பில் வரவேற்று, தலைமை கழகம் எதிர்பார்த்திடும் முழுமையான ஒத்துழைப்பை அவர்களுக்கு வழங்குவோம் என்பதை இக்கூட்டத்தின் சார்பில் தீர்மானிக்கப்ப டுகின்றது.

வாக்காளர் சேர்க்கைக்கான சிறப்பு முகாம்கள் நவம்பர் 9, 10, 23 மற்றும் 24 தேதிகளில் நடை பெற இருக்கின்றது. எனவே அந்தந்த மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்ட தொகுதி மேற்பார்வையாளர்கள் மற்றும் மாவட்ட கழகத்தால் நியமிக்கப் பட்ட பாக முகவர்கள் (BLA2) மேற்கண்ட முகாம்களில் கலந்து கொண்டு சிறப்பாக பணியாற்றிட இக்கூட்டத்தின் சார்பில் தீர்மானிக்க ப்படுகின்றது.

கடந்த வாரம் சென்னையில் பெய்த கன மழையின் போது மாநகர எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் வெள்ளம் தேங்கிடாமல் பொதுமக்கள் எந்த ஒரு சிரமத்திற்கும் ஆளாகாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்ததன் மூலம் தேங்கிய மழைநீரை உடனுக்குடன் வெளியேற்றும் வகையில் இரவு, பகல் பாராமல் கொட்டும் மழையிலும் கள பணியாற்றிய தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு, தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களுக்கு இக்கூட்டம் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.கழக பெயரில் இந்தியன் வங்கி, ஜங்சன் கிளையில் கணக்கு துவங்குதெனவும். மாவட்டச் செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர் இணைந்து இயக்குவதென வும் தீர்மானிக்கப்படுகின்றது.

அதே நேரத்தில் மாவட்டக் கழகத்தில் செயலாளரோ அல்லது பொருளாளரோ மாற்றப்பட்டால் அதனை தக்க ஆதாரத்தோடு, அவ்வபோது வங்கிக்கு தெரிவிப்பதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக் கப்படுகின்றது.

நவம்பர் 27 அன்று தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு நவம்பர் மாதம் முழுவதும் தஞ்சை மத்திய மாவட்ட நிர்வாகிகள் சார்பில் மாவட்டத்தில் உள்ள மறுவாழ்வு இல்லம், முதியோர் இல்லம், கருணை இல்லம், ஆதரவற்றோர் இல்லம், பார்வையற்றோர் இல்லம், காதுகேளாதோர் விடுதிகளில் உள்ள மாணவ மாணவிகளுக்கு அறுசுவை உணவு வழங்குவதெனவும், அந்நிகழ்ச்சியில் மத்திய மாவட்ட அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பிப்பதென இக்கூட்டத்தின் சார்பில் தீர்மானிக்கப்படுகின்றது.

நவம்பர் 07 அன்று தஞ்சை மகாராஜா மஹாலில் நடைபெறும் பூதலூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் கல்லணை செல்லக்கண்ணு அவர்களின் மகள் திருமண நிகழ்ச்சிக்கும், தஞ்சாவூர் இராமநாதன் ரவுண்டானா அருகில் தஞ்சை நாடாளுமன்ற அலுவலக திறப்பு விழாவிற்கும், திருவையாறு தெற்கு ஒன்றியம், கண்டியூர் கிளை கழகத்தில் புற வழிச்சாலையில் கழக பவள விழா கொடி ஏற்றுதல் நிகழ்ச்சி மற்றும் திருவையாறு தெற்கு ஒன்றியம், கோனேரிராஜபுரத்தில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வெண்கல சிலை திறப்பு விழா & கலைஞர் நூற்றாண்டு நூலகம் திறப்பு விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள தஞ்சைக்கு வருகை தரும் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் சிறப்பான வரவேற்பு வழங்குவது என இக்கூட்டத்தின் சார்பில் தீர்மானிக்கப்படுகின்றது.



புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி மாநகராட்சிக்கு உட்பட்ட அரசு நடுநிலைப் பள்ளியில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 3 லட்சம் மதிப்பீட்டில் புதிய ஸ்மார்ட் வகுப்பறை திறப்பு விழா மற்றும் 2 லட்சம் மதிப்பீட்டில் மாணவ – மாணவிகளுக்கான இருக்கைகள் மற்றும் மேஜைகள் வழங்கும் விழாவில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா கலந்துகொண்டு மாணவ, மாணவிகளிடையே சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் புதுக்கோட்டை மாநகர மேயர் திருமதி.திலகவதி செந்தில், மாநகர துணை மேயர் லியாகத்அலி, கழக நிர்வாகிகள் அவைத் தலைவர் அ.ரத்தினம், க.நைனாமுகமது, க.செல்லையா, பால்ராஜ், வடவாளம் மணிமாறன், சுந்தரம், சரவணன், கண்மணிசுப்பு, மதியழகன், விஜயகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



நாகை வெளிப்பாளையத்தில் இயங்கி வரும் நாகை நெட்வொர்க் ஆப் பாசிட்டிவ் பீப்புல் என்ற அமைப்பு எச்.ஐ.வி. நோயால் பாதிப்புக்கு உள்ளான பெண்களுக்கு தீபாவளியை முன்னிட்டு ஆடைகளை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என். கௌதமன் வழங்கினார். உடன் நாகை நகர கழக செயலாளர் இரா.மாரிமுத்து, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் குலோத்துங்கன், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் விமல் மொக்கை ஆகியோர் உள்ளனர்.